

**கொரோனா(Covid 19) எனும் பெரும் தொற்றுநோய் காலத்திலும்**

## நீச்சல்வீரன் நவரத்தினசாமி அவர்களின் சாதனை தினத்தின் 66ம் ஆண்டு நினைவாக..

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரினையை முதன் முதலில் நீந்திக் கடந்து சாதனை படைத்த பெருமை யாழ்ப்பாணத்து முருகுப்பிள்ளை நவரத்தினசாமியையே சாரும்.

யாழ் குடாநாட்டின் வடபாகத்து தொண்டைமானாறு மண் தந்த இந் நீச்சல் வீரனின் சாதனையும் புகழும் உலகறியும். எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற சைவப்பெரியார் முருகுப்பிள்ளை லீலாவதி தம்பதினருக்கு செல்வப்புதல்வனாய் 1909 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் திகதி இப் பூமியில் இச் சாதனையாளர் பிறந்தார்.

### மாணவப் பருவம்

சீரும் சிறப்புமாய் வளர்ந்த இவர், ஆரம்பக் கல்வியைத் தொண்டைமானாறிலும், மேற்படிப்பை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் மேற்கொண்டார். "வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலும் , விளையும் பயிரை முளையிலும் தெரியும்" என்ற பழமொழிகளுக்கு ஒப்ப கூரிய மதியும், வீரிய திறனும், நேரியசிந்தையும் கொண்ட சீரிய மாணவனாய் இவர் மாணவப் பருவத்திலேயே சிறந்து விளங்கினார்.

கல்வியில் ஆர்வம் மிகக் கொண்ட இவர் முன்னெவராலும் கடந்திராத ஆங்கிலக் கால்வாயை வெள்ளைக்கார வீரன் ஒருவன் நீந்திக் கடந்த அதிசயச் செயலை, ஆசான் வாயிலாக கேட்டறிந்ததிலிருந்தே தானும் தம் பக்கதிலிருக்கும் பாக்குநீரிணையை என்றொரு நாளாவது நீந்திக் கடந்து சாதனை படைக்க வேண்டும் என்ற வைராக்கியமும் ஆர்வமும் கொண்டார். அத்துடன், தீராத முயற்சிகளையும், நீச்சல் பயிற்சிகளையும் நாளாந்தம் இவர் தொடர்ச்சியாக மேற்கொண்டார்.

**"தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்"** என்னும் திருவள்ளுவர் வாக்கை தம் மனதில் பதிய வைத்து 44 வயது நிரம்பப் பெற்றவராயிருந்தும், வீரமுறுக்கேறிய வாலிபனாக காலையிலும், மாலையிலும் களைக்காது கடலிலே காலத்தைக் கடத்தி பயிற்சி செய்தார்.

### முதலாவது பயிற்சி

தமிழ் அன்னையின் தமிழ்ப்புதல்வன், ஈழநாட்டு சிங்கம் சாகரக்குமரன், நவயுக மாருதி நவரத்தினசாமி 31 1/2 மைல் நீளமுள்ள பாக்கு நீரினனய நீந்திக் கடப்பதற்காக 1954 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி முதன் முதலாக ஆழியில் குதிக்கலானார். இவ் வீரதீரச் செயலை, ஒப்பற்ற சாதனையைப் பார்ப்பதற்கும், வீர

மகனை ஆசிர்வதித்து வழியனுப்புவதற்கும் நாற்திக்கில் இருந்தும் மக்கள் கும்பல்கும்பலாக வல்வெட்டித்துறை துறைமுகத்தில் வந்து குவியலானார்கள். தாயுள்ளம் படைத்த தமிழ் மக்கள் தங்களின் வீர மகன் வெற்றி விருதுடன் வீடு திரும்ப வேண்டுமென இறைவனைப் பிராத்தித்தனர்.

இவ் வீரமகன் தமது 3 புத்திரர்களையும் மார்புறத் தழுவி முத்தமிட்டு பிரியாவிடை கூற மக்களும் முதியோரும் ஆசியியம்ப அன்றைய இலங்கைப் பிரதமரின் பிரதிநிதியாகச் சமூகம் கொடுத்திருந்த வி.நல்லையா (பாரளுமன்ற உறுப்பினர்- எம்.பி)வழியனுப்பி வைக்க பிற்கபல் 2.30 மணிக்கு நவயுக மாருதி நவரட்ணசாமி தமது வீரப்பாதம் ஆழியில் தோய்த்து நீச்சலை ஆரம்பிக்கலானார்.



**இயற்கையின் சீற்றம்**

நீச்சலை ஆரம்பித்த நேரத்திலிருந்து எவ்வித களைப்பும் சோர்வுமின்றி சாகரத்தை ஊடறுத்து நவயுக மாருதி நீந்தினார், நீந்தினார், நீந்திக்கொண்டே போனார். ஆனால் குறிக்கப்பட்ட இலக்கை அதாவது கோடிக்கரையை அடைவதற்கு இன்னும் 7 மைல் தூரமே இருந்த நிலையில் இயற்கை கொடுத்த பெரும் போரினாலும் எதிர்ப்பினாலும் நமது நீச்சல் நிபுணன் தமது நீச்சலை நிறுத்தி கட்டுமரம் ஏறலானார்.

ஆயினும் ஆழியில் பாதம் இட்டு நீச்சலை ஆரம்பித்த நேரம் தொடக்கம் நீச்சலை கைவிட்ட நேரம் வரைக்கும் 23 1/2 மணித்தியாலங்கள் அலை கடலில் மிதந்து நீரோட்டம் அள்ளிக் கொண்டு போன தூரம் வரைக்கும் உண்மைக் கணக்கின்படி 35 மைல் வரை நீந்திக் கடந்துள்ளார். எனவே முதற் தடவையிலேயே முன்னிருந்த உலக சாதனையை உடைத்தெறிந்த வீரரென இவரைக் குறிப்பிடுதல் உண்மையிலே பொருத்தமானதாகும்.

**சாதனை**



பாக்கு நீரிணையைக் கடந்தே தீருவேன் எனத் தான் கூறிய வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்றும் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டான் தமிழன் என்ற நற்பேரை நிலைநாட்ட வேண்டும் என்றும் தனியான ஆசை கொண்டு 1954 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.10 மணிக்கு மீண்டும் கடலில் குதிக்கலானார்.

இலங்கை மாதா தன் மைந்தனின் நீச்சலை இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள். தமிழ்த்தாய் வெள்ளக் கமலத்தில் வீற்றிருந்து உள்ளம் மகிழ்ந்தாள். பாரதமாதா தனது உடன் பிறந்த தங்கை மகனைவரவேற்க புன்னகை பூத்த முகத்துடனும் புது மலருடன் கோடிக்கரையை அண்டி வந்தாள்.

நீச்சலை ஆரம்பித்த நேரத்தில் இருந்து சொற்ப நேரமும் இளைப்பாறாது தொடர்ந்து நீந்திச் சென்று, தாய் நாடும் தமிழகமும், ஏன் ஆசியா கண்டமுமே ஆனந்தத்தால் கரைபுரண்டோட உலகமே கேட்டிராத ஒப்பற்ற சாதனையை வெள்ளிக்கிழமை இரவு 7:00 மணிக்கு யாழ்ப்பாணத் தமிழ் மகன் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி நிறைவேற்றி கோடிக்கரையேறி கொடியேற்றி வைத்தார்.

**வரவேற்பும் வாழ்த்தும்**

இவ் வீரசிகாமணி பாக்கு நீரினையைத் தாண்டி கோடிக்கரையேறி வீரக்கொடி நாட்டிய செய்தி இலங்கை வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது. இலங்கை மற்றம் இந்திய மக்களும் குறிப்பாக யாழ்ப்பாண மக்களும் ஆழ்கடலின்றி ஆனந்தக்கடலில் நீந்தலானார்கள். இலங்கை- இந்திய பத்திரிகைகள் யாவும் பெரிய எழுத்துக்களால் தலையங்கம் இட்டு இவ் வீர சிகாமணியின் வீரப் பிரதாபத்தை அகில உலகமும் விளங்க வைத்தன. இந்தியப் பிரதமர் பண்டித நேரு, இலங்கைப் பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவலை முதலான பிரமுகர்களிடம் இருந்து வாழ்த்தோலைகள் இவருக்கு கிடைக்கப்பெற்றன.

நம் வீரருக்கு வரவேற்பளிக்கும் முதலாவது பாக்கியம் இந்தியாவிற்கே கிடைத்தது. இவ் வரவேற்பில் பங்குபற்றிய பின்பு வாகை சூடிய நவரத்தினசாமி தம் தாயக மண்ணிற்கு வருகையில் இவ் வீரரை வரவேற்க வல்வெட்டித்துறை துறைமுகத்தில் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். மேலும் பல பிரமுகர்களால் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டார்.

அத்துடன் யாழ்ப்பாண நகர மேயரால் தங்கசங்கிலியும், பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாலையால் ஓர் வெள்ளிக் கேடயமும் இவருக்கு பரிசுகளாக்கப்பட்டன. ஈற்றில் இவ் வீரனை இலங்கை அரசாங்கம், மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கும் கோமகனுக்கும் அறிமுகம் செய்து பெருமைப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இத் திருமுக தரிசனம் தமிழ் வீரனுக்குக் கிடைத்தமை தமிழ் மக்களுக்கு ஓர் பெரும் பாக்கியமும் கௌரவமும் ஆகும்.

***இவரைப்பற்றிய மேலும் சில தகவல்கள் வருமாறு:***

- பிறந்த திகதி :-16.08.1909 (110 ஆண்டுகள் கடந்துவிட்டன)
- இறந்த திகதி :-01.07.1969 (60வயதில் - இன்று அரை நூற்றாண்டை கடந்து விட்டோம்.)
- சாதனை படைத்தது :- 25.03.1954 (45வயதில்)
- பிள்ளைகள்
    1. N.ராமச்சந்திரன் (இளைப்பாரிய இலங்கை வங்கி முகாமையாளர்)
    2. N.பாலச்சந்திரன் (அமரர் - Retired Paddy marketing Board manager -இவர்தான் கை, கால்களை கட்டியபடி ஊர்காவற்துறை -காரைநகர் துறைகளுக்கு இடையேயான 1500 அடி அகல கடலை நீந்திக் கடந்தவர். இவரது மகன் திரு.B.ஹரிகரன் என்பவர் இன்றும் வைத்தியராக கொழும்பில் கடமை புரிந்து வருகின்றார்.
    3. N.ஞானச்சந்திரன் (அமரர் - M.P.S manager)

**நினைவுச் சிலை**

தொண்டைமானாற்றுப் பாலத்து அருகே இவருக்கான நினைவுச் சிலை 25.03.2015 இல் திரு.இ.த.ஜெயசீலன் (பிரதேச செயலர் - வடமராட்சி வடக்கு) அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை தொண்டைமானாற்று ஒற்றுமை விளையாட்டுக்கழகம், ஊர்மக்கள் என்போர் அனுசரணை வழங்க குடும்பத்தினரும், அமரர் Dr.K மயிலேறும்பெருமாளும்(வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி), இவ்வாக்கத்தினரான சிறியேனும்(Banker-ந.சிவரட்ணம்) சாவகச்சேரி கச்சாயைச் சேர்ந்த, யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை பகுதி நேர விரிவுரையாளர் திரு.சோதிநாதன் போன்றோரால் வழிநடத்தப்படும் ‘‘வினோபா பாலர் பகல் பராமரிப்பு இல்லம்’’ எனும் அமைப்பும் தென்மராட்சி மக்களும், தொண்டைமானாற்று மக்களும் எனப் பலராலும் ஆக்கமும் ஊக்கமும் நல்கப்பட்டன.

## புலிக்கு பிறந்தது பூனை ஆகுமா?



செல்வன்
பாலச்சந்திரன்

இப்பழமொழிக்கிணங்க நீச்சல் வீரன் நவரத்தினசாமியின் இரண்டாவது மகன் பாலச்சந்திரன் 21.07.1963 இல் (தனது 16 வயதில்) கைகளையும் கால்களையும் கயிற்றினால் கட்டியபடி 1500 அடி அகலமான ஊர்காவற்துறை துறைமுகத்திற்கும் காரைநகர் துறைமுகத்திற்கும் இடையேயான கடல்நீரோட்டத்தை குறுக்கறுத்து நீந்திக் கடந்து சாதனை படைத்தார். இது உலகம் அறியாத ஒரு விடயமாகும்.

## இவர் கடமை புரிந்தது

இலங்கை விவசாய திணைக்களத்திலாகும்.இங்கு இவர் பல நவீன கருவிகளை கண்டுபிடித்து அறிமுகமாக்கினார். 1960களில் கல்வித் திணைக்களத்தால் தமிழ்மொழி பாடத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்காக அச்சிடப்பட்ட **"உமா வாசகம்"** எனும் நூலில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு.

''இவர் நீச்சல் வீரர் மட்டுமல்ல கணிதம், சங்கீதம், சித்திரம் காற்பந்தட்டாம் என்பவற்றிலும் சிறந்து விளங்கினார்'' - தொண்டைமானாற்று ஒற்றுமை விளையாட்டுக் கழகத்திலும் ஒரு முன்னணி வீரராகத் திகழ்ந்தார்.

## கௌரவங்களும் சான்றிதழ்களும்

பல பொது மக்களின் அமைப்புக்களின் பாராட்டு நிகழ்வுகளை தவிரவும் இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல என்பவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் பெற்றதுடன் இங்கிலாந்தின் இலங்கை தூதுவர் கௌரவ C.C.தேசாய் ஊடாக 06.04.1954 திகதியிடப்பட்ட பாராட்டுக்கடிதம் மற்றும் பிரித்தானிய பேரரசின் வெற்றிப்பதக்கமும் பாராட்டு பத்திரமும் பெற்றுக்கொண்டார்.

குறிப்பு:- திரு.நவரத்தினசாமி 1954இல் தனது சாதனையை நிலைநாட்டிய பின் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனதத்திற்கு( ரேடியோ சிலோன்) தனது நண்பர்களுடன்

இணைந்து அளித்த நேர்காணலின் ஒலிப்பதிவு (சீ.டி) என்வசம் உண்டு. ஆர்வலர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொகுப்பு
ந.சிவரட்ணம்(0766463289)
valvaijeyam@gmail.com
வல்வை ஜெயம்
இலங்கை வங்கி வடமாகாண ஓய்வு நிலை உதவிப்பொது முகாமையாளர்
மற்றும் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்க இணைப்பாளர்